பள்ளிக் கல்வித்துறை ,ஈரோடு மாவட்டம்

# 12 ம் வகுப்பு வரலாறு – வினா விடை (2014-15)

## இந்திய வரலாறு (3 மதிப்பெண்)

## 1.ரோகில்லா போர்

➢ரோகில்கண்ட் ஆட்சியாளர் ஹபிஸ் ரகமத்கான்.
➢அயோத்தி நவாப்புடன் பாதுகாப்பு உடன்படிக்கை மேற்கொண்டார்.
➢கட்டணம் தர மறுத்ததால் பிரிட்டிஷ் உதவியுடன் நவாப் படையெடுத்தார்.

## 2. இரண்டாம் ஆங்கில மைசூர் போர்:

➢பிரிட்டிஷாருக்கும், ஹைதர் அலிக்குமிடையே இரண்டாம் ஆங்கில மைசூர் போர் ஏற்பட்டது.
➢ஹைதர்அலி தோல்வியடைத்து, புற்று நோயால் இறந்தார்.
➢இப்போர் 1784 ல் மங்களூர் உடன்படிக்கையால் முடிவடைந்தது.

## 3.ஸ்ரீரங்கப்பட்டினம் உடன்படிக்கை (1792)

- 1792 ல் மூன்றாம் மைசூர் போரினை முடிவுக்கு கொண்டு வந்தது ஸ்ரீரங்கப்பட்டினம் உடன்படிக்கை.
- தோல்வி அடைந்த திப்பு சுல்தான் தனது ஆட்சியின் பாதி பகுதியை பிரிட்டிஷாருக்கு விட்டுக்கொடுத்தார்.
- போர் இழப்பீட்டுத் தொகை 3 கோடி ரூபாய்க்கு இணையாக திப்புவின் இரு புதல்வர்களையும் ஆங்கிலேயரிடம் விடப்பட்டனர்.

## 4.காரன் வாலிஸ் பிரபுவின் காவல் துறை சீர்த்திருத்தம்:

- மாவட்ட நீதிபதியின் கட்டுபாட்டில் காவல் துறை இருந்தது.
- ஒவ்வொரு மாவட்டமும்’தானா”என்ற பிரிவுகளாக பிரிக்கப்பட்டது.
- ‘தரோகா”என்ற காவல் துறை அதிகாரியின் கீழ் தானா ஒப்படைக்கப்பட்டது.

## 5.பசீன் உடன்படிக்கை

- 1802ல் பிரிட்டிஷாருக்கும் இரண்டாம் பாஜிராவுக்கும் இடையே பசீன் உடன்படிக்கை ஏற்பட்டது.
- மாராட்டி அயலுறவுக் கொள்கை பிரிட்டிஷ் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது.
- மராட்டியர்கள் இதை அடிமை சாசனம் என்பர்.

## 6.கூர்க்கர் போர்:

- 1814ல் கூர்க்கர்கள் பிரிட்டிஷ் காவல்நிலையத்தை தாக்கி 18 காவலர்களை கொன்றனர்.
- ஹேஸ்டிங்ஸ் பிரபு நேபாளத்தின் மீது போர் தொடுத்தார்.
- 1816ல் சகௌலி உடன்படிக்கையால் இப்போர் முடிவுக்கு வந்தது.
- 8.சதி:
- கணவரின் சிதையிலேயே விதவையைத் தள்ளி கொன்று விடுதல்.
- வட இந்தியாவில் காணப்பட்டது.
- 1829ல் வில்லியம் பெண்டிங் பிரபு சதி தடைச்சட்டம் கொண்டு வந்து இதை ஒழித்தார்.

## 9.மெக்காலே பிரபு:

- தலைமை ஆளுநரின் ஆலோசனைக் குழுவில் நியமிக்கப்பட்ட முதல் சட்ட உறுப்பினர் டி.பி. மெக்காலே பிரபு.
- கல்வி வளர்ச்சிக்காக இவரது தலைமையில் குழு அமைக்கப்பட்டது.
- இதன் மூலம் ஆங்கிலம் ஆட்சி மொழியாகவும், இலக்கிய மொழியாகவும் அறிவிக்கப்பட்டது.

## 10.சர் சார்லஸ் வுட் அறிக்கை:

- இந்தியாவின் அறிவும் பட்டயம்.
- டல்ஹவுசி காயத்தில் 1854ல் சர்சார்ல்ஸ்வும், கல்வி அறிக்கை நடைமுறை படுத்தப்பட்டது.
- தொடக்கக்கல்வி, இடைநிலைக்கல்வி,உயர்கல்வி ஆகியவற்றின் கல்வி வளர்ச்சி வழி வகுத்தது.

## 7.டல்   ஹவுசியின் அஞ்சல்துறை சீர்திருத்தம்:

- நவீன அஞ்சல்முறையை தொடங்கி வைத்தார் டல்ஹவுசிபிரபு.
- 1854 ல் புதிய அஞ்சலகச்சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- ஒரே மாதிரியான அரையணா அஞ்சல் செய்யப்பட்டன.

## 8.மகல்வாரி முறை:

- 1833ல் மகல்வாரி முறை அறிமுகம் செய்யப்பட்டது.
- பஞ்சாப்,மத்திய மாகாணங்கள் வடமேற்கு மாகாணங்களில் அறிமுகம் செய்யப்பட்டது.
- கிராமங்கள் அரசுக்கு வரி செலுத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டன. இடைத்தரகர்கள் இல்லை.

## 9.இரயத்துவாரி முறை:

- சர்தாமஸ் மன்றோ சென்னையில் அறிமுகப்படுத்தினர்.
- குடியானவர்களே நிலத்தின் உடமையாளர்கள்.
- எந்தவொரு இடைத்தரகரும் இல்லை.

## 10.பெண் சிசுக் கொலை:

- ராஜபுதனம், பஞ்சாப், வடமேற்கு மாகாணங்களில் பெண் சிசுக்கொலை பரவலாக காணப்பட்டது.
- பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இதைப்பற்றி ஆய்வு செய்தனர்.
- இந்த வழக்கத்தை ஒழிக்க பல சட்டங்கள் கொண்டு வரப்பட்டது.

## 11.பர்தா முறை:

- 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில் பர்தா அணியும் வழக்கத்திற்கு எதிராக குரல்கள் எழுந்தன.
- தென்னிந்தியாவில் இவ்வழக்கம் பெருமளவு இல்லை.
- எந்த சட்டமும் இயற்றாமலே காலப்போக்கில் மறைந்தது.

## 12.புலித்தேவர்:

- நெல்கட்டும் செவல் பகுதியின் தலைவர்.
- மறவர்களின் வீரத்தையும், தேசப்பற்றையும், வெளிக்கொணர்ந்தவர்.
- கர்னல் கேம்பல் என்ற பிரிட்டிஷ் தளபதியால் புலித்தேவர் தோற்கடிக்கப்பட்டார்.

## 13.பானர்மேன்:

- கட்டபொம்மனுக்கு எதிராக பிரிட்டிஷ் படைகளுக்கு தலைமை வகித்தவர் பானர்மேன்.
- சிவசுப்பிரமணிய பிள்ளை, கட்டபொம்மனை தூக்கிலிட உத்திரவிடப்பட்டார்.
- கட்டபொம்மன் கைது செய்து விசாரணை நடத்தி, கயத்தாறில் தூக்கிலிடச்செய்தார்.

## 14.சர்ஜான்கிரடாக்:

- 1806 ல் வேலூர் கலகத்திற்கு முக்கிய காரணம் சர்ஜான் கிரடாக் என்ற படைதளபதி அறிமுகப்படுத்திய சீருடையாகும்.
- இந்த புதிய தலைபாகையுடன் கூடிய சீருடை ஐரோப்பிய தொப்பினை போலவே இருந்தது.
- மேலும் காலணிகளை அணிவதும்,சமயச் சின்னங்களை இட்டுக் கொள்வதும் இவரால் தடைசெய்யப்பட்டன.

## 15.கர்னல் ஜில்லஸ்பி

- ராணிப்பேட்டையிலிருந்து ஆங்கில ராணுவத்தளபதி கர்னல்
- ஜில்லெஸ்சி ஆவார்.
- வேலூர் கலகத்தை அடக்கியவர்.
- வேலூர் கோட்டையில் பெரும்பாலான சிப்பாய்களை சுட்டுக் கொன்றவர்

## 16.ராணி லட்சுமிபாய்:

- ஜான்சியை சார்ந்த அரசர் கங்காதாரவின் மனைவி ராணி லட்சுமிபாய்
- 1857 ல் பெரும் காலத்தில் பங்கு வகித்தவர்.
- டல்ஹெளசியின் வாரிசு இழப்புக் கொள்கையால் நேரடியாக
- பாதிக்கப்பட்டு, போரில் கொல்லப்பட்டார்.

## 17.மறுமலர்ச்சியின் பொருள்:

- மறுபிறப்பு அல்லது மீட்சி என்று பொருள்.
- மறுமலர்ச்சியின் தாயகம் இத்தாலி.
- பண்டைய கிரேக்க,இலத்தீன் இலக்கியங்கள் மற்றும் கலை அறிவியலில் மாற்றங்கள் ஏற்பட்டன.

## 18. லியானார்டோ டாவின்சி:

- மறுமலர்ச்சி கால புகழ்பெற்ற ஓவியர்.
- பிளாரன்ஸ் நகரில் பிறந்தார்.
- மோனாலிசா, இறுதி விருந்து ஆகியவை இவருடைய புகழ்பெற்ற ஓவியங்கள்.

## 19.மாலுமி ஹென்றி:

- போர்ச்சுகல் நாட்டு அரசரான ஹென்றி மாலுமி அரசர் என்று அழைக்கப்படுகிறது.
- மெடீரா மற்றும் அசோகர் தீவுகள் கண்டுபிடிக்கப்பட்டன.
- கடல்பகுதியில் தொடர் பயணங்களை மேற்கொள்வதில் ஹென்றி பெரிதும் ஆர்வம் காட்டினார்.

## 20.மெகல்லன்:

- மெகல்லன் ஐந்து ஸ்பானிய கப்பல்களோடு மாலுமிகளை அழைத்துக்கொண்டு உலகத்தை சுற்றி வர பயணம் மேற்கொண்டார்.
- உலகை வலம் வந்த முதல் பயணம்.
- மெகல்லன் பிலிப்பைன்ஸ் தீவில் பழங்குடி மக்களால் கொல்லப்பட்டார்.

## 21.இயேசு சபை:

- இயேசு சபையை உருவாக்கியவர் இக்னேஷியஸ் லயோலா.
- இந்த சபையின் உறுப்பினர்கள் ஜெசூட்டுகள் என அழைக்கப்பட்டனர்.
- இயேசு சபை சீடர்கள் கல்வியை பரப்பினர்.

## 22.பாஸ்டன் தேநீர் விருந்து:

- 1773ல் தேயிலை இறக்குமதியின் மீது புதிய வரியை இங்கிலாந்து அமெரிக்க குடியேற்றங்களில் விதித்தது.
- அமெரிக்கர்கள் செவ்விந்தியர்கள் போல் வேடம் தரித்தனர்.
- பாஸ்டன் துறைமுகத்தில் தேயிலை பெட்டிகளை கடலில் வீசினர்.

## 23.ரூசோ:

- சமூக ஒப்பந்தம் என்ற நூலின் ஆசிரியர்.
- அரசின் உண்மையான அதிகாரம் மக்களிடம் உள்ளது.
- மனிதன் சுதந்திரமாகப் பிறக்கிறான். ஆனால் பின்பு சங்கிலிகளால் பிணைக்கப்படுகிறான் என்று ரூசோ கூறினார்.

## 24. ஜான் மெக்காடம்:

- இங்கிலாந்தில் ஜான் மெக்காடம் என்பவர் நிலத்தின் கெட்டியான மேற்பரப்பின் மீது சாலையை அமைத்தார்.
- சேற்றுக்கு பதிலாக தார் கலவை கொண்ட கற்கள் இதற்கு பயன்படுத்தப்பட்டன.
- அரசின் ஆதரவுடன் பல சாலைகள் அமைக்கப்பட்டன.

## 25. வெர்சேல்ஸ் உடன்படிக்கை:

- வெர்சேல்ஸ் உடன்படிக்கை மூலம் முதல் உலகப்போர் முடிவுக்கு வந்தது.
- 1919 ஆண்டு இந்த உடன்படிக்கை ஏற்பட்டது.
- போரில் தோல்வியடைந்த ஜெர்மனியும் அதன் கூட்டணி நாடுகளும் துன்பம் அடைந்தன.

## 26. குருதி ஞாயிறு:

- ரஷ்யாவில் தொழிலாளர்கள் தங்களது குறைகளை தெரிவிக்க அரசர் மாளிகையை நோக்கி ஊர்வலமாக சென்றார்.
- கேபன் என்பவர் தலைமை தாங்கினார்.
- ஊர்வலத்தின் மீது காவலாளிகள் துப்பாக்கி சூடு நடத்தினர்.இந்த நிகழ்ச்சி 1905ம் ஆண்டு ஞாயிறு கிழமை நடைபெற்றது.

## 27. நீண்ட பயணம்:

- மாசேதுங் என்பவர் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்.
- இவர் வடசீனாவிற்கு நீண்ட பயணம் மேற்கொண்டார்.
- கம்யூனிஸ்ட் கட்சியில் கட்டுப்பாட்டை ஏற்படுத்தினார்.